**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**S.T.C. No. 793-2023**

| L.W.2 P.W.4 | | |
|---|---|---|
| Name: | அமர்ஜோதி | Caste: |
| Father's Name: | தியாகராஜன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026 (எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது ஆய்மூரில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். எனது அக்காவோடு, ஆஜர் எதிரிகளில் குமார் என்ற எதிரியின் மனைவி வேலை செய்து வருகிறார். ஆகையால், எதிரிகளை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும், பஞ்சநாதத்திற்கு இடையே சொத்து தகராறு இருந்ததாகவும், அது சம்பந்தமாக இருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன். பஞ்சநாதத்தின் மகன் எனது அண்ணனுக்கு மைத்துனர் முறையாவர். அவரை காரில் அழைத்துக்கொண்டு, வாய்மேடு காவல் நிலையத்திற்கு சென்றேன். ஆஜர் எதிரிகளுக்கும், பஞ்சநாதத்திற்கும் நடந்த தகராறு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு நன்கு தெரியும். கடந்த 14.10.2022 அன்று வெள்ளிக்கிடங்கில் வசிக்கும் பஞ்சநாதம் என்பவர், அவருடைய நிலத்தில் உழவு செய்யும்போது, ஆஜர் எதிரிகள் அ.சா.1-ஐ தகாத வார்த்தைகளில் திட்டியதாகவும், கீழே தள்ளிவிட்டு கையால் மாறி மாறி அடித்ததாகவும், எதிரிகள் இருவரும் கொலை

மிரட்டல் விடுத்ததாகவும், அதனை நான் நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எனக்கு நன்கு தெரிந்தவர்கள் என்பதால், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டி, உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 22.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**